

# பரிந்துரைக்கப்பட்ட குறுகிய காலப் பாதைகள்

தீவின் மையத்தில் அமைந்துள்ள புக்கிட் தீமா, பல நூற்றாண்டுகளாக சிங்கப்பூரின் வரலாற்றில் நிகழ்ந்த பல முக்கிய நிகழ்வுகளின் மையமாகத் திகழ்ந்து வந்திருக்கிறது. புக்கிட் தீமா சாலையில் உள்ள பல்வேறு பகுதிகளில் பயணிப்பதன் மூலமும், கீழ்க்கண்ட மூன்று கருப்பொருள் சார்ந்த மரபுடைமைப் பாதைகள்பல்வேறு விதமான கட்டிடங்கள், கட்டமைப்புகள், சமய நிறுவனங்கள், சமுதாயத் தளங்கள், இயற்கை வளங்கள் நிரம்பிய பாரம்பரியச் சின்னங்கள் போன்ற கலாச்சாரச் செறிவுள்ள இடங்களையும், அவைப் பற்றிய பல்வேறு வகையான வரலாற்றுத் தகவல்களையும் வழங்குகிறது.

புக்கிட் தீமா மரபுடைமைப் பாதை தேசிய மரபுடைமைக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்தக் கழகம், சிங்கப்பூரிலுள்ள பாரம்பரியமான இடங்களின் வரலாறு மற்றும் சமூக நினைவுகளை ஆவணப்படுத்தி வழங்கி வருகிறது. இந்தப் பாதையின் மூலம், இந்தப் பாரம்பரியமான இடங்களில் வேலை செய்த, வாழ்ந்த அல்லது இப்பகுதியில் விளையாடி மகிழ்ந்தவர்களின் மலரும் நினைவுகளை மீண்டும் வெளிக்கொண்டு வருவதோடு, அவற்றின் மூலம் பார்வையாளர்களிடமும் புதிய குடியிருப்பாளர்களிடமும் பயனுள்ள தகவல்களை பகிர்ந்துகொள்ளவும் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆதரவளிப்போர்

National Heritage Board

MCCY Ministry of Culture, Community and Youth



அப்பர் புக்கிட் தீமா ரோடு, 1982
லீ கிப் லின் தொகுப்பிலிருந்து. அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை.
லீ கிப் லின் மற்றும் தேசிய நூலக வாரியம், சிங்கப்பூர் 2016

## ஓய்வு மற்றும் கற்றலுக்குமான பாதை

(2 மணிநேரம்; கால்நடையாக)

புக்கிட் தீமா அதன் குடியிருப்பாளர்களாலும், சிங்கப்பூரர்களாலும் நன்கு நேசிக்கப்படும் சமூகத் தளங்களையும், ஓய்வுக்கான தளங்களையும் கொண்டுள்ளது. பிரபலமான உணவகங்கள், சிங்கப்பூரின் முதல் யுனெஸ்கோ உலக மரபுடைமைப் பகுதி ஆகியவையும், அத்துடன் மற்ற சில முக்கியமான ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்வி மையங்களும் இந்தப் பாதையில் அடங்கும்.



பூமலை பெருவிரைவு இரயில் நிலையத்திலிருந்து வெளியேறும் வழி A-யில் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள். கொஞ்ச தூரம் சென்று புக்கிட் தீமா சாலையில் இறங்கி க்ளூனி கோர்ட்டுக்குச் செல்லுங்கள். அங்கு வரிசையாக வணிக மையங்கள் உள்ளதைக் காணலாம். அவற்றில் க.ஃபேக்கள் மற்றும் பிற வணிக மையங்களும் அடங்கும். 1928- ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த வணிக மையங்கள், நகரச் சீரமைப்பு ஆணையத்தால் (URA) பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த வணிக மையங்களில் 1900 முதல் 1940 வரையிலான ஆண்டுகளில் கையாளப்பட்ட தனித்துவமான கட்டுமான அம்சங்களான சிறப்பு அலங்கார அமைப்புகளும், பள்ள இடைவெளிகள் கொண்ட தூண்களும், பாஸ்-ரிலீ.ஃப் சிற்ப வேலைப்பாடுகளும் மற்றும் புதுப்புது வடிவங்களைக் கொண்ட கட்டுமான ஓடுகளையும் கொண்டு தனிச்சிறப்புடையதாக இருப்பதைக் காணலாம்.

அடுத்து, புக்கிட் தீமா சாலையைத் தாண்டி, 1974- இல் திறக்கப்பட்ட ஆதாம் உணவு மையம் செல்ல வேண்டும். ஒரு மேம்பாலம் கட்டுவதற்காக வேண்டி, பல சாலையோர சிறு வியாபாரிகளை வேறு இடங்களில் இருந்து இவ்விடத்திற்கு மாற்றுவதற்கு முன்பு வரை, இந்த மையம் திறந்தவெளி உணவு விடுதிகளின் தொகுப்பிடமாக இருந்து வந்தது. இங்கே நீங்கள் ருசியான "நாசி லெமக்" (மலாய் மொழியில் "தேங்காய் பால் சாதம்"), சுப் துலாங் (மலாய் மொழியில் "எலும்பு மஜ்ஜை சூப்") மற்றும் இந்திய ரோஜக் (இது நன்கு பொறித்தெடுக்கப்பட்ட பஜ்ஜி மற்றும் பிற பொருட்களையும் கொண்ட ஒரு உணவு) ஆகியவற்றையும் ருசித்து மகிழலாம்.



ஆதாம் .ஃபுட் சென்டரிலிருந்து, டனர்ன் சாலையில் இறங்கி கீயம் ஹாக் சாலையை நோக்கி நடந்து இரண்டு சாலைகளும் சந்திக்கும் முனைக்குச் செல்லுங்கள். அங்கிருந்து டனர்ன் மற்றும் புக்கிட் தீமா சாலைகளைக் கடந்து சென்றால், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் புக்கிட் தீமா வளாகத்தை நீங்கள் அடைவீர்கள். 1928-ஆம் ஆண்டு சிங்கப்பூரின் இரண்டாவது பெரிய உயர் கல்வி நிறுவனமாக அமைக்கப்பட்ட பழைய ரா.ஃபிள்ஸ் கல்லூரியின் மைதானங்கள் இவையே ஆகும். இந்த வளாகத்தில் உள்ள கட்டிடங்கள் நியோ-கிளாசிக்கல் மற்றும் சர்வதேச நவீன கட்டிடக்கலை உள்ளிட்ட பல புதுமையான பாணிகளை பிரதிபலிக்கின்றன. இக்கட்டிடத் தொகுப்புகள் அனைத்தும் தேசிய நினைவுச்சின்னமாக அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ளன.



சிங்கப்பூர் பூமலை .ஃபார்மர் ரா.ஃபிள்ஸ் கல்லூரி மைதானங்களை ஒட்டி அமைந்துள்ளது. இப்பூங்கா தான், இந்தப் பண்பாட்டுப் பயணத்தின் கடைசி நிறுத்தமாக உள்ளது. 1859-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தத் தாவரவியல் பூங்கா சிங்கப்பூரின் முதல் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாகும். ஆண்டுகள் செல்லச் செல்ல, இந்தத் தாவரவியல் பூங்கா, தாவர அறிவியல் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளது. அத்துடன், இந்தப் பூங்கா பிராந்தியம் முழுவதும் பொருளாதார மாற்றங்களையும், சுற்றுச்சூழல் மாற்றங்களையும் கொண்டு வருவதில் ஒரு தொடக்கக் காரணியாகவும் செயல்பட்டுள்ளது. இந்தப் பூங்காவில், மழை வனத்தில் காணப்படும் பல்வேறு வகையான மரங்களையும், செடிகளையும் நீங்கள் ஆராய முடியும். அல்லது 1866-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அமைதி பொங்கும் ஸ்வான் ஏரியைச் சுற்றி ஒரு நடை உலாவை நீங்கள் மேற்கொள்ளலாம். இந்தப் பூங்காவிற்குள் 1868-ல் கட்டப்பட்ட பர்கில் ஹால் உட்பட பல பாதுகாக்கப்பட்ட கட்டிடங்களையும் நீங்கள் பார்வையிடலாம். பர்கில் ஹால் என்ற இந்த இரண்டு மாடி பங்களா, இன்று உலகில் மிஞ்சியிருக்கும் ஆங்கிலோ-மலாய் பாணியில் கட்டப்பட்ட தோட்ட வகையிலான வீட்டிற்கு ஒரே உதாரணமாகும்.



## இரண்டாம் உலகப் போர் மரபுடைமைப் பாதை

(1.5 மணிநேரம்; பேருந்து மற்றும் கால்நடையாக)

இரண்டாம் உலகப் போரின் போது (WWII), புக்கிட் தீமா ஜப்பானியர்களுக்கு ஒரு முக்கிய இலக்காக இருந்தது. ஏனெனில், இப்பகுதியில் தான் ஆங்கிலேயர்களின் சப்ளை டிப்போக்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் முக்கியப் போர் தளமான புக்கிட் தீமா மலை ஆகியவை அமைந்துள்ளன. இந்த மரபுடைமை பாதை, இரண்டாம் உலகப் போருடன் தொடர்புடைய தளங்களையும், ஜப்பானிய ஆக்கிரமிப்பின் நினைவுகளையும் மற்றும் அதன் பாரம்பரிய மரபுகளையும் சுமந்துகொண்டிருக்கும் இடங்களை ஆராய்கிறது.



ஹிந்ஹிந்தே டிரைவின் வழியாக புக்கிட் தீமா இயற்கைப் பாதுகாப்பு வனப்பகுதி இருந்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள். 1880-களில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட இந்த நிலப்பரப்பு, சிங்கப்பூரில் உள்ள முதன்மையான மழைக்காடுகளின் மிகப்பெரிய பகுதியை தன்னகத்தே கொண்டுள்ளது. அத்துடன், பல்வேறு வகையான தாவர வகை மற்றும் விலங்கு வகைகளின் புகலிடமாகவும் இந்த நிலப்பரப்பு அமைந்துள்ளது. இந்த நிலப்பரப்புக்குள் அமைந்துள்ள 163 மீட்டர் உயர புக்கிட் தீமா மலை தான், இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்களுக்கு புக்கிட் தீமாவை ஒரு முக்கிய இலக்காக ஆக்கியது. ஏனெனில், படையெடுக்கும் சக்திகள் ஒரு ராஜ தந்திர நிலைப்பாட்டை எடுப்பதற்கு இந்த மலை பெரிதும் உதவியது. நேசப் படைகள் எவ்வளவோ முயன்றும், ஜப்பானிய படையினரால் இந்த மலை 11 பிப்ரவரி 1942 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. பார்வையாளர்கள் மையத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு மரபுடைமை பண்பாட்டுச் சின்னமாக விளங்கும் இந்த நிலப்பரப்பு, இப்பகுதியில் நடைபெற்ற சில போர்கள் பற்றிய பல முக்கிய ஆதாரங்களை நமக்கு வழங்குகிறது.

இந்த நிலப்பரப்பிலிருந்து, ஒரு பேருந்தில் ஏறி, அப்பர் புக்கிட் தீமா சாலைக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து முன்னாள் .ஃபோர்டு தொழிற்சாலைக்குச் செல்லுங்கள். தென்கிழக்கு ஆசியாவில் .ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட முதல் ஆட்டோமொபைல் அசெம்பிளி தொழிற்சாலையாக அமைந்திருந்த இது, சிங்கப்பூர் படையெடுப்பின் போது, ஜப்பானிய லெப்டினென்ட்-ஜெனரல் யமஷிடா டோமொயூகியின் தற்காலிக தலைமையகமாக மாறியது. 1942-இல் இந்த இடத்தில் தான் ஆங்கிலேயர் ஜப்பானியரிடம் சரணடைந்த சம்பவம் நடந்தேறியது. இந்தச் சம்பவமே ஜப்பானிய ஆக்கிரமிப்பின் ஆரம்ப நிகழ்வாக அமைந்தது. 2017-ஆம் ஆண்டில், "ஜப்பானியர் ஆட்சியில் உயிர்வாழ்தல்: போரும் அதன் நினைவுச்சுவடுகளும்" என்று தலைப்பிடப்பட்ட நிரந்தரமான கண்காட்சி ஒன்று தொடங்கப்பட்டது. இக்கண்காட்சியானது, போர் மற்றும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு ஆகியவற்றைச் சுற்றியுள்ள நிகழ்வுகளையும் நினைவுகளையும் வெளிப்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது.



மீண்டும் ஒரு பேருந்தில் ஏறி, மேல்புற புக்கிட் தீமா சாலைக்கு வந்து, அங்கிருந்து பியூட்டி வோர்ல்ட் மையம் செல்லவும். இந்த ஷாப்பிங் மால் 1984-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு, முன்னாளைய பியூட்டி வோர்ல்டில் இருந்துவந்த சாலையோர சிறு வணிகர்கள் மற்றும் கடைக்காரர்களுக்கான வணிக மையமாக மாறியது. ஒரு சந்தையாகவும், பொழுதுபோக்கு மையமாகவும் திகழ்ந்து வந்த முன்னாளைய அழகு உலகம், ஜப்பான் ஆக்கிரமிப்புக் காலத்தில், தைய் டோங் ஆவ் சாய் காய் (கான்டோனிய மொழியில் "மிகப்பெரிய கிழக்கு ஆசிய உலகம்" ) என்ற பெயரில் அமைக்கப்பட்ட ஒரு கேளிக்கை பூங்காவாக இருந்தது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், தங்கள் ஆட்சிக்கான எதிர்ப்புணர்வை திசை திருப்பும் நோக்கத்தோடும், ஜப்பானிய அதிகாரிகள் இந்தப் பூங்காவில் சூதாட்ட நடவடிக்கைகளை அனுமதித்ததோடு, அவற்றை ஊக்கப்படுத்தவும் செய்தனர். போருக்குப் பின், தைய் டோங் ஆவ் அழகு உலகம் என்று பெயர் மாற்றப்பட்டு, புக்கிட் தீமா குடியிருப்பாளர்களுக்கான ஒரு சந்தையாகவும் மாறியது. இங்கு 160-க்கும் அதிகமான சந்தைக் கடைகளும், ஒரு சினிமாத் தியேட்டரும் ஒரு சீனக் கோவிலும் இருந்தன. ஐந்து தனித்தனி நிகழ்வுகளில் தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், அழகு உலகம் இறுதியாக 1983-இல் மூடப்பட்டது.



நீங்கள் இப்போது இந்தப் மரபுடைமை பண்பாட்டுப் பயணத்தின் நிறைவுப் பகுதிக்கு வந்துவிட்டீர்கள்! உங்களுக்குப் பசியாக இருந்தால், நீங்கள் இப்போது சீயோங் சின் நாம் சாலைக்குப் போகலாம். அங்கு பல்வேறு விதமான உணவகங்கள் உள்ளன. இந்தச் சாலைக்கும், இதை ஒட்டியுள்ள பல சாலைகளுக்கும் சீயோங் சுன் டின் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. சீயோங் தெற்கு சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த சீன வம்சாவளியைச் சேர்ந்த முதலாவது சான்றளிக்கப்பட்ட பல் மருத்துவர் ஆவார். இவர் 1869-ஆம் ஆண்டில் தெற்கு பிரிட்ஜ் சாலையில் தனது பல் மருத்துவத் தொழிலை நிறுவினார். பின்னர் சியோங் குடும்பம் பியர்லி வெள்ளை பற்பசை பிராண்டுக்கான தயாரிப்பு தொழிற்சாலையை நிறுவியது.



## கம்போங் வாழ்க்கைப் பாதை

(1 மணிநேரம்; பேருந்து மற்றும் கால்நடையாக)

புக்கிட் தீமாவின் பழைய கம்போங்கில் (கிராமப் பகுதியில்) இருந்த கட்டிடங்களும், நிறுவனங்களும் இன்னும் இப்பகுதியில் காணப்படுகின்றன. இந்த மரபுடைமைப் பாதையின் மூலம், ஒரு பழைய இரயில் நிலையத்தையும், சில தெய்வீகத் தளங்களையும் பார்க்கப் போகிறோம். ஒரு காலத்தில் கம்போங் குடியிருப்பாளர்களின் சமய மற்றும் சமூக வாழ்க்கையில் மையப் பகுதியாக இருந்த இக்கட்டிடங்களும், நிறுவனங்களும் அந்த மக்களுக்கு இன்னும் அதே பணிகளைச் செய்து வருகிறது.



கிங் ஆல்பர்ட் பார்க் பெருவிரைவு இரயில் நிலையத்திலிருந்து (வெளியேறும் வழி A), மேற்கு நோக்கி நடந்து புக்கிட் தீமா சாலையில் இறங்கி இரயில்வே டிரஸ் பாலம் நோக்கிச் செல்ல வேண்டும். பழைய புக்கிட் தீமா ரயில் நிலையத்திற்குச் செல்லும் ஒரு குறுகிய பாதை அந்த டிரஸ் பாலத்திற்கு அருகே உள்ளது. 1930-களில் கட்டப்பட்ட இந்த இரயில் நிலையம், சிங்கப்பூரையும் மலாய் தீபகற்பத்தையும் இணைத்த முன்னாள் இரயில்வே பாதை ஒன்றின் பகுதியாக இருந்தது. இந்த ஒற்றை மாடி இரயில் நிலையம், பாரம்பரிய ஐரோப்பிய நாட்டுப்புற சிறு கட்டிடங்களை நினைவூட்டுவதாக அமைக்கப்பட்டிருந்தது. இதில் ஆறு கட்டமைப்புத் தளங்களைக் கொண்ட, ஒரு திறந்தநிலை பிளாட்பாரமும், ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் அலுவலகமும், காத்திருக்கும் தளங்களும் மற்றும் ஒரு சிக்னல் அலுவலகமும் உள்ளன. இந்த இரயில் பாதை மக்களின் வாழ்விடங்களுக்கு இணையாக ஓடியது. சில சமயங்களில் அந்தப் பாதை, கம்போங் குவாரி மற்றும் .ஃபியோங் பேட்டை போன்ற பல குடியிருப்பு பகுதிகளுக்கு குறுக்காகவும் சென்றது. இரயில் தண்டவாளங்களுக்கு அருகில் விளையாடும் குழந்தைகளுக்கும், அல்லது இரயிலின் ஓசைகளுக்குப் பழக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கும் இந்த இரயில் பாதை அவர்களது தினசரி வாழ்க்கையின் ஒரு நெருங்கிய அங்கமாகவே இருந்து வந்தது.

அடுத்து, அங்கிருந்து புக்கிட் தீமா சாலைக்குத் திரும்பி, அங்கிருந்து ஒரு பேருந்திலேயோ அல்லது பெருவிரைவு இரயில் நிலையத்திலேயோ ஏறி, சிக்ஸ்த் அவென்யுவுக்குச் செல்லுங்கள். சிக்ஸ்த் அவென்யுவில் இறங்கி, அதன் வழியாக நடந்து ஜாலான் ஹாஜி அலியாஸை அடைந்து, அங்கிருந்து அல்-ஹுதா பள்ளிவாசலை நோக்கிச் செல்லவும். 1925-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தப் பள்ளிவாசல், இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லீம் கிராமவாசிகளுடைய சமூக வாழ்க்கையின் மையமாக இருந்தது. இந்தப் பகுதி 1980-கள் வரை பல மலேசியக் கிராமங்களைக் கொண்ட பகுதியாக இருந்து வந்தது. கம்போங் பூர்வகுடி மக்களின் கிராமத் தொகுப்பில், கம்போங் கோரோனேசன் (அல்லது கம்போங் தெம்பே) மற்றும் கம்போங் ஹாலண்ட் ஆகியவை முக்கியமான கிராமங்களாக இருந்து வந்தன. இந்தப் பள்ளிவாசலில், ஒரு மரபுடைமைக் கைத்தொழில் கூடத்தை நீங்கள் காணலாம். இந்தக் கூடம், மசூதியின் மரபுடைமைப் பண்பாட்டை வெளிக்காட்டுவதாக உள்ளது.




இந்தக் குறுகிய கால மரபுடைமை பாதையின் கடைசி நிறுத்தம், ஹூன் ஸான் கோவில் ஆகும். இந்தக் கோயில் அல்-ஹுதா பள்ளிவாசலில் இருந்து ஒரு தெரு தாண்டியதும் வந்துவிடும். சீனாவில் .ஃபுஜியான் பகுதியில் உள்ள ஜியாஜொவ் கிராமத்திலிருந்து இங்கு குடியேறிய மக்களால் 1902-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த கோவில், லிம் டை சீ என்ற தெய்வத்தை மூலக் கடவுளாக கொண்டுள்ளது. இந்தக் கடவுளின் பெயரே, ஜாலான் லிம் டை சீ சாலைக்குப் பெயராக சூட்டப்பட்டுள்ளது. ஹூன் சன் கோவிலில், ஹொக்கியன் பாணியில் கட்டப்பட்ட, மரத்திற்குள் மரத்தைப் பொருத்தும் உத்திரங்கள் முக்கிய சிறப்பம்சமாக உள்ளது. அதேபோல், புனிதமான தெய்வீகத் தன்மையையும், பாரம்பரிய சீனக் கலாச்சாரத்தையும் அடிப்படையாக வைத்து வரையப்பட்ட நுண்மையான பிளாஸ்டர் பதிவோவியங்களும், சுவரோவியங்களும் இக்கோவிலில் உள்ளன. 1980-கள் வரை, கோயிலுக்கு அருகிலிருக்கும் ஒரு நிரந்தர வயங்கில் (மலாய் மொழியில் "வீதி நாடக மேடை") பல கலை நிகழ்ச்சிகள் வழக்கமான முறையில் நடந்து வந்தன. அந்தக் கலை நிகழ்ச்சிகள் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து பார்வையாளர் கூட்டத்தைக் கவர்ந்திழுத்து வந்தது.



**விருப்பம் இருந்தால்:** புக்கிட் தீமாவின் கடந்த கால கிராமிய வாழ்க்கையை நீங்கள் மேலும் ஆராய விரும்பினால், மேல்புற புக்கிட் தீமா சாலைக்கு பேருந்து வழியாகச் சென்று .ஃபுயோங் பேட்டைக்கு செல்லுங்கள். அல்லது இரயில் பாதை வழியாக நடை பயணமாக அங்கு சென்று சேருங்கள். இந்த .ஃபுயோங் பேட்டை, கொடையாளியாகிய லீ காங் ஷியன் அவர்களால்1950-களில் கட்டப்பட்டது. சிங்கப்பூரில் குடியிருக்கும் இல்லங்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டபோது, குறைந்த விலையில் நவீன இல்லங்களை உருவாக்கி மக்களுக்கு அளிக்கும் விதமாக இதை அவர் கட்டினார். இது மலாய் ராக் இசை இயக்கத்தின் தந்தையாகிய பாடகர்-பாடலாசிரியர் ராம்லி ஷரிப்பின் சிறுவயது இல்லமாக அறியப்பட்ட முன்னாள் காம்போங் சாமருக்கு அடுத்ததாக அமைந்துள்ளது. இங்கு, மேல்புற புக்கிட் தீமா சாலையிலிருந்து தொடங்கும் இன்னொரு இரயில்வே ட்ரஸ் பாலத்தையும் நீங்கள் காணலாம், அல்லது அதன் அருகிலுள்ள இரயில் மாலில் சில புத்துணர்ச்சியூட்டும் பொருட்களை நீங்கள் வாங்கி மகிழலாம்.


*பழைய புக்கிட் தீமா இரயில்வே நிலையத்தை சுற்றியுள்ள பகுதி, தண்ணீர் குழாய்களைப் பதிக்கும் பொருட்டு, 2018-ஆம் ஆண்டு இறுதி வரை மூடப்பட்டிருக்கும்.





# HERITAGE SITES IN THE SUGGESTED SHORT TRAIL ROUTES




BUKIT TIMAH NATURE RESERVE




CHEONG CHIN NAM ROAD, CHUN TIN ROAD, YUK TONG AVENUE & THAM SOONG AVENUE




FORMER BEAUTY WORLD




FORMER FORD FACTORY




FORMER BUKIT TIMAH RAILWAY STATION



HOON SAN TEMPLE




MASJID AL-HUDA




ADAM FOOD CENTRE



CLUNY COURT SHOPHOUSES



FORMER RAFFLES COLLEGE



SINGAPORE BOTANIC GARDENS

All information contained in this trail map is provided in good faith, and every reasonable effort has been made to ensure that the information is accurate and up to date at time of print. Accordingly, NHB makes no warranty or representation relating to the trail map and all information contained therein, and users relying on any of the information contained in the trail map shall do so at their own risk and diligence.

©2018 National Heritage Board. All rights reserved.